## பொதுக்காலம் முப்பதாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

## திருவழிபாடு ஆண்டு - B

## 2024-10-27

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம்.* 31:7-9,

*பதிலுரைப்பாடல்: திபா.* 126:16,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்.* 5:1-6,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 10: 46-52)

***திருப்பலி முன்னுரை***

*இயேசுவின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்களே, ஆண்டின் பொதுக்காலம்* 30 *ஆம் வாரத் திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் உங்களை அன்புடன் வாழ்த்தி வரவேற்கின்றேன். ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மக்கள் சார்பாகச் செயலாற்றும் நம் இறைவனின் இதய அன்பைப் பற்றியும், மாற்றமடையாத அவருடைய வாக்குறுதிகள் பற்றியும், நோய் தீர்க்கும் அவருடைய வல்லமை பற்றியும், பரிவு காட்டக் கூடியவராயிருக்கும் அவருடைய மன்னிக்கும் அளவுகோல் பற்றியும் இன்றைய இறைவார்த்தைகள் நம்மோடு பேசுகின்றன. எனவே நாம் இறைவன் முன்பாக சிரம் தாழ்த்தி அவருடைய இதய அன்பிற்காக நன்றி சொல்லுவதோடு, மாபெரும் விடுதலைச் சக்தி அவர் மட்டுமே என்பதை நாம் ஆழமாக விசுவசித்து, அவரிடமே நம்பிக்கை கொண்டு, மனமாற்றம் பெற்று புதுவாழ்வு வாழ இத்திருப்பலியில் வரங்கேட்டுச் செபிப்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*மாபெரும் செயல்களைப் புரிபவரே!*

*உம் மக்களாகிய நாங்கள் தீய செயல்களினால் பார்வையற்று வாழ்கிறோம். பார்வையற்ற பார்த்திமேயு பார்வைப் பெற்றதைப் போல தாங்களும் பார்வை பெற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*பெரும் செயல்களைப் புரிபவரே!*

*திருஅவையை நன்முறையில் வழிநடத்தும் உம் ஊழியர்களை நிறைவாக ஆசீர்வதியும். மேலும் அவர்கள் திருஅவையை நன்முறையில் நடத்த வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.*

*மாபெரும் செயங்களைப் புரிபவரே!*

*நாங்கள் அறியாமையினால் நெறிதவறி வாழ்கிறோம். உமது அன்பினை உணர்ந்தவர்களாய் நல்நெறியில் பயணிக்க வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.*

*மாபெரும் செயல்களைப் புரிபவரே!*

*எமது பங்கிலுள்ள இளையோர்களை உம் கரத்தில் தருகின்றோம். உம்மையும், உமது அன்பினையும் புறக்கணிக்காதவர்களாய் நன்முறையில் வாழ வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.*

*மாபெரும் செயல்களைப் புரிபவரே!*

*வேலையில்லாமல் அன்றாட தேவைகளுக்கு அவதிப்படுகின்ற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து நல் வேலைவாய்ப்பைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பின் பிறப்பிடமே இறைவா!*

*நான்தான் அனைத்திற்கும் தலைவன் என்று பிறரின் துன்பங்களைக் கண்டு சிரித்து வாழும் மக்களாக வாழாமல் பிறரின் துன்பங்களைக் காணும்போது உதவி செய்யும் மக்களாக எங்களை வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*துன்புற அழைப்பவராம் இறைவா,*

*உம் திருமகன் இயேசுவின் சிலுவைப் பயணத்தைப் பின்பற்றி, இறையாட்சியின் இலட்சியங்களுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் நல்ல உள்ளத்தை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் தந்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*